Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 204/2024 PW-3**

Name : விமலா
Father / Husband name : பழனி
Village : நொளம்பூர்
Age : 59
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 12.11.2025

Accused 1 to 7 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**முதல் விசாரணை ( நேரம் 12.11 - 12.19 )**

நான் வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.1 ரேகா எனது மகள். சாட்சி பிரகாஷ் எனது மகன், அவர் தற்போது இறந்துவிட்டார். சாட்சி கற்பகம் எனது மாமியார். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். 04.04.2021 அன்று எனது மகள் ரேகா திண்டிவனத்திலிருந்து ஓட்டுபோடுவதற்காக எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். 05.04.2021 ம் தேதி இரவு 10 மணியளவில் எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டின் கதவை தட்டினார்கள். எனது மகன் பிரகாஷ் கதவை திறந்தவுடன் எதிரிகள் அவரிடத்தில் உதய சூரியனுக்கு ஓட்டுப்போடக்கூடாது என்று போட்டால் தலையை வெட்டுவோம் என்று மிரட்டினார்கள். எனது மகள் சென்று மறித்தபோது எதிரிகள் அனைவரும் சேர், கூடை, தட்டு, உருட்டுக்கட்டை, கத்தி ஆகியவற்றால் அடித்ததில் எனது மகள் ஒருவயது கைக்குழந்தையுடன் இருந்தவர் கீழே விழுந்துவிட்டார். நானும் எனது சின்ன மாமியார் கற்பகமும் மறித்தபோது எதிரிகள் எங்களையும் அடித்து கீழே தள்ளிவிட்டார். எனது மகனை துரத்தி சென்றார்கள், அவர் வேளிக்காத்தான் மரத்தின் பின்னால் மறைந்துகொண்டார்கள். எனது மகளை ஜாதியின் பெயர் சொல்லி திட்டி, பரையனுக்கு தான் போவியா எங்களுடன் வரமாட்டியா என்று பரையனுக்கு தான் பிள்ளையை பெற்று வைத்துள்ளாயா என்றும் அசிங்க

அசிங்கமாக பேசினார்கள். எதிரிகள் 1000 குடும்பத்தார்கள் என்றும் எங்களை ஒன்னும் பன்ன முடியாது என்று சொன்னார்கள். பின்னர் இதுகுறித்து எனது மகள் ஒலக்கூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( நேரம் 12.19 - 12.46 )</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் பிறந்து வளர்ந்தது என்று நொளம்பூர் என்றால் சரியல்ல, செய்யூர், எனது கணவர் நொளம்பூரை சேர்ந்தவர். எனக்கு திருணமாகி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 35 வருடம் ஆகிறது. எங்கள் ஊரிலுள்ளவர்களின் பெயர், முகவரி எனக்கு தெரியும் என்றால் எதிரிகளின் பெயர் தெரியும். வழக்கு சம்மந்தமாக போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று இரவு 10 மணியளவில் போலிசார் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இரவு 10 மணியளவில் போலிசார் வந்துவிட்டார்களா என்றால் இல்லை, இரவு 10 மணிக்கு சம்பவம் நடைபெற்றது, நாங்கள் தகவல் சொல்லி சுமார் 10 நிமிடத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள்.

2. போலிசாருக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் எனது மகள். போலிசாருக்கு எனது மகள் தகவல் கொடுத்ததாக போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகள் கத்தி, தடி ஆகியவற்றை எடுத்துவந்து எங்கள் தலையை வெட்டிவிடுவோம் என மிரட்டியதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி ஆயுதங்களை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை, அதனை எதிரிகள் எடுத்துச்சென்றுவிட்டார்கள். எங்கள் வீட்டில் உடைத்த பொருட்களை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை, வீடியோ எடுத்தார்கள். சம்பவத்தில் எனது மகளுக்கும், கைக்குழந்தைக்கும் அடிப்பட்டதாக சொல்லியுள்ளேன், எனது மகளை

யார் மருத்துவமனைக்கு அழைத்துசென்றது என்றால் நாங்கள் அழைத்துசென்றோம். எனக்கும் எனது மாமியார் கற்பகத்திற்கும் அடிப்பட்டதற்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோமா என்றால் எடுத்துக்கொண்டோம். அதற்கான ஆவணத்தை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்துள்ளேன்.

3. முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு ஜாதி பெயரை வைத்து திட்டியதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு 1000 வீடு உள்ளது, உங்களால் எதுவும் செய்யயிலாது என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மகனை துரத்திச்சென்று வேளிக்காத்தான் மரத்திற்கு பின்னால் அடித்ததாக சொல்லியதை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விவரங்களை தற்போது நீதிமன்றத்தில் சொல்கிறேன், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, உண்மையை தான் சொல்கிறேன். உண்மையில் அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றால் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவம் தொடர்பாக நான் புகார் கொடுத்துள்ளேனா என்றால் நானும் எனது மகளும் புகார் கொடுத்தோம்.

4. மகள் ஓட்டுபோடுவது சம்மந்தபோது சண்டை போட்டதால் தேர்தல் ஆணையரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மகள் தேர்தல் ஆணையரிடம் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் எந்த தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றால் எனக்கு தெரியாது, நான் வீட்டில் இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எத்தனை முறை போலிசார் விசாரித்தார்கள் என்றால் 4, 5 முறை விசாரித்தார்கள். எனது மகன் பெயர் என்ன என்றால் பிரகாஷ். எனது

மகன் நொளம்பூர் பள்ளியில் பணிபுரிந்தாரா என்றால் ஆமாம். அப்போது அவர் மீது தவறான நடவடிக்கையின்பேரில் புகார் பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரிகள் வேறு ஒருவருக்கு வேலை பெறுவதற்காக பொய் புகார் கொடுத்தார்கள். அந்த புகாரின்பேரில் எனது மகனை பள்ளியிலிருந்து நிறுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல, மகனாக தான் நின்றுவிட்டார். இதுசம்மந்தமாக அந்த பள்ளியின் ஆசிரியர், தலைமை ஆசிரியரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். மேற்படி முன்விரோதத்தை வைத்து தான் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. எனது மகன் எந்த கட்சியில் பணிபுரிந்தார் என்றால் கட்சியில் இளைஞர் அணியில் இருந்தார். எதிரிகள் அனைவரும் வேறு ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்திற்கு மறுநாள் சட்டமன்ற தேர்தல் நாள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு பூத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் கால் கி.மீ. தூரம் இருக்கும். மேற்படி பூத்திற்கு எங்கள் வீட்டு வழியாக செல்லலாம் என்றால் சரிதான். தேர்தலுக்கு முந்தைய நாள் பூத்தில் பொருட்களை இறக்கிவைப்பார்கள் என்றால் சரிதான். எதிரிகள் ஏஜென்ட் என்ற முறையில் அந்த வழியாக செல்லும்போது எனது மகன் மதுபோதையில் எதிரிகளிடம் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல, எங்கள் வீட்டு கதவை எதிரிகள் தட்டினார்கள், எனது மகனை தாக்கினார்கள். எனது மகன் சாதுவான நபர், அவர் இறந்துவிட்டதால் பொய்யான பழி சுமத்துகிறார்கள். எனது மகன் எதிரிகளிடம் பிரச்சனை செய்யும்போது நான் மறிக்க சென்றபோது எனக்கும் அடிப்பட்டது என்றால் சரியல்ல, எனது மகனை அடிக்கும்போது நானும் மகளும் மறிக்கச்சென்றோம்.

6. நான் சொல்வதுபோல் எதிரிகள் கத்தி, தடி ஆகியவற்றை எடுத்துவந்து அடித்ததாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார்

புகைப்படம் எடுத்திருந்தால் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் போலிசார் அவர்களின் செல்போனில் எடுத்தார்கள். நான் சொல்வதுபோல் ஆயுதம் இல்லாததால் போலிசார் ஆயுதங்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரம் இரவு 10 மணி என்றால் சரிதான். எனது வீட்டருகே இருட்டாக இருக்கும் என்றால் சரியல்ல, மின்விளக்கு உள்ளது, எங்கள் வீட்டில் லைட் போட்டுவிட்டு கததை திறந்தோம். நான் 35 வருடம் அந்த ஊரில் வசிப்பதால் கட்சியின் அடிப்படையில் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் ஜாதி பெயரை சொல்லி திட்டியிருந்தால் போலிசார் அதற்கான சட்டப்பிரிவுகளை சேர்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

7. புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நானும் எனது மகளும், மருமகனும் சென்றோம். எனது மருமகன் என்ன செய்கிறார் என்றால் வழக்கறிஞராக திண்டிவனம் நீதிமன்றதில் பணிபுரிகிறார். புகாரை அவர் தான் எழுதினார் என்றால் தெரியாது, எனது மகள் கொடுத்தார், போலிசார் புகாரை எழுதினார்கள். எனது மருமகன் வழக்கறிஞர் என்பதால் பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**